THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL

THIRTY-SEVENTH SESSION OF THE LEGSLATIVE COUNCIL

UNDER THE CONSTITUTION OF INDIA.

Thursday, the 26th November 1970

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (The Hon. Thiru C. P. CHITRARASU) in the Chair.

[*Note*: **An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

I. OBITUA Y REFERENCE

(1) Dr. C. V. Raman, Eminent Scientist

Mr. CHAIRMAN: It is with deep regret that I have to inform the House that Dr. C. V. Raman, Eminent Scientist and Nobel Laureate, died on the 21st November 1970 at Bangalore. Born in Tiruchirapalli in our State on 7-11-1888, Dr. Raman obtained his Master's Degree from the Madras University with distinction. "Raman Effect" earned Dr. Raman the Nobel Prize for Physics in 1954. He was devoted to his scientific researches till the last of his life. In his death, our country has lost an illustrious son of India.

On behalf of the House, I shall convey our deep sense of sorrow to the members of the bereaved family.

I request the hon. Members to stand in silence for a couple of minutes as a mark of respect to the deceased.

Accordingly, all the Members stood in silence for a couple of minutes.

(2) Thiru Era Elamvazhuthi, a sitting Member of the Tamil Nadu Legislative Assembly.

(3) Thiru K. Balasubramanya Ayyar, a former Member of the Tamil Nadu Legislative Council.

(4) Thiru M. P. Govinda Menon, a former Member of the Tamil Nadu Legislative Council.

[26th November 1970

மிஸ்டர் சேர்மன் : தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவையின் உறுப்பினராயிருந்த திரு இரா. இளம்வழுதி திடீரென அகால மரணமடைந்த செய்தியையும் தமிழ் நாடு சட்ட மன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினர்கள் திரு கே. பாலசுப்ரமணிய ஐயர், திரு எம். பி. கோவிந்த மேனன் ஆகியோர் இறந்துவிட்டதையும் இந்த அவைக்கு வருத்தத்துடன் தெரியப்படுத்துகிறேன்.

திரு. இரா. இளம்வழுதி கடலூர் சட்டமன்றப் பேரவை தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு 1967ஆம் ஆண்டு முதற்கொண்டு தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவையின் உறுப்பினராக இருந்து வந்தார். அவர் கடலூர் நகராட்சி மன்றத்திலும் உறுப்பினராயிருந்தார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது அவர் மும்முறை சிறை சென்றுள்ளார். 1942இல் தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கி, 1944இல் திராவிட முன்னேற்றக் கழக மாணவர்கள் பெடரேஷனில் சேர்ந்தார். அவர் 1949ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் பொதுக் குழு உறுப்பினரானார். திறமை மிக்க இளம் வழக்கறிஞராகிய அவர் சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளில் முனைப்பாகப் பங்கு எடுத்துக்கொண்டதோடு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீவிர உறுப்பினராகவும் இருந்தார். அவர் இறக்கும்பொழுது அவருக்கு வயது 45 தான்.

திரு கே. பாலசுப்ரமணிய ஐயர் பட்டதாரிகள் தொகுதியிலிருந்து தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டு 1952 முதல் 1968 வரை இந்த அவையின் உறுப்பினராக இருந்திருக்கிறார். அவர் மாநிலக் கல்லூரியில் படித்து, இரசாயனத்தில் பல்கலைக் கழகத்தின் தங்கப் பதக்கத்தையும் பெற்றார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகக் குழு (Syndicate), ஆலோசனைக் குழு (Senate), கல்வி மன்றம் (Academic Council), ஆகியவற்றின் உறுப்பினராகவும் இருந்திருக்கிறார். அவர் சிறப்பு வாய்ந்த வழக்கறிஞராகவும் கல்வி வல்லுநராகவும், வடமொழி, தமிழ் ஆகியவற்றில் புலமை மிக்கவராகவும் விளங்கினார்.

இவர் மேலவையின் பெருமதிப்பிற்குரிய உறுப்பினராக விளங்கியதோடு மட்டுமல்லாமல் இந்த அவையில் எழுப்பப்பட்ட பிரச்சினைகள் அனைத்திலும் அச்சமின்றி எப்போதும் தமது கருத்தைத் தெரிவித்தார். இம்மன்றத்தில் 1952 முதல் 1968 வரை 19 ஆண்டுகள் நற்பணியாற்றினார். 1965இல் இவருக்கு "பத்மபூஷன்" விருது வழங்கப்பட்டது. அன்பாலும், பண்புமிக்க தமது அரிய குணங்களாலும் இவர் அனைவரது உள்ளத்தையும் கவர்ந்தார்.

திரு.எம்.பி. கோவிந்த மேனன் 1952 முதல் 1956 வரை பிரிவினையாகாத சென்னை மாநிலச் சட்ட மன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினராக இருந்துள்ளார்; சட்ட மன்றப் பேரவைத் தொகுதியிலிருந்து அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் மல்லபுரம் பொது கிராமத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு 1946 முதல் 1952 வரை சட்ட மன்றப் பேரவை உறுப்பினராகவும் இருந்துள்ளார். முதற்கண் இவர் ஆசிரியராகத் தமது வாழ்க்கையைத் தொடங்கினார். பின்னர், இவர் வழக்குரைஞராகத் தொழிலேற்று மலபாரில் வழக்குரைஞராயிருந்தார். இவர் தனி நபர் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டு 1941இல் சிறை புகுந்தார். மாவட்ட அரசியலில் மிருந்த ஈடுபாடுகொண்டு, அன்றைய காங்கிரஸ் கட்சியில் தீவிர உறுப்பினராக இருந்தார்.

இவர்களது மறைவால் துயருற்றிருக்கும் இவர்களின் குடும்பத்தினருக்கு மேலவையின் சார்பில் எனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவர்களது மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இரு நிமிடம் எழுந்து நின்று மௌனமாயிருக்குமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

Accordingly, all the Members stood in silence for a couple of minutes.

II. CONDOLENCE RESOLUTION ON THE DEATH OF THIRU M. ETHIRAJULU, A SITTING MEMBER OF THE COUNCIL

Mr. CHAIRMAN: I have to inform the House, with regret, of the sudden and untimely demise of Thiru M Ethirajulu, a sitting Member of this House, on 18—9—1970. I now call upon the Hon. the Chief Minister (Leader of the House) to move the Condolence Resolution.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, "இந்த அவையிலே உறுப்பினராக இருந்த திரு எம். எத்திராஜுலு அவர்கள் திடீரென்று இயற்கை எய்தியது குறித்து இந்த அவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றது. அன்னாரது குடும்பத்திற்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் பரிவுணர்ச்சியையும் தெரிவித்துக்கொள்ளுகின்றது" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, மறைந்த நண்பர் திரு. எத்திராஜுலு அவர்கள் இந்த மன்றத்தில் மிகுந்த அக்கறையோடும் ஆர்வத்தோடும் நாட்டுப்பணியாற்றிய நல்லவர்களில் ஒருவராவார்கள். சலவைத் தொழிலாளர்களுடைய முற்போக்குக்காக எந்த அளவு அவர் பாடுபட்டார் என்பதும், அவர்களுடைய முறையீடுகளையெல்லாம் உடனுக்குடன் இம்மா மன்றத்திலே எடுத்துவைத்து, அவைகளுக்கெல்லாம் தக்க நிவாரணம் தேடவேண்டுமென்பதில் எவ்வளவு முனைப்போடு இருந்தார்கள் என்பதையும் நாம் அனைவரும் வெகு நன்றாக அறிவோம். திரு. எத்திராஜுலு அவர்கள் இந்த அவையில் பேசுகிற நேரத்தில் அவருக்கே உரிய இயல்பான கடுமை அவருடைய பேச்சிலே இருந்தாலும், பேசி முடித்த பிறகு அதைவிட கனிவோடு எதிர்த் தரப்பில் இருப்பவர்களிடையே பழகுவதில் இனிய சுபாவமும் அன்புள்ளமும் கொண்டவர்களாவார்கன். பொது வாழ்க்கையில் எவ்வளவுதான் கொள்கை மாச்சர்யங்கள், கட்சி வேறுபாடுகள் இருந்தாலும்கூட, அவைகளெல்லாம் வாதத்திற்காக என்கிற அளவோடு நிறுத்திவிட்டு, பழகுகிற நேரத்தில் மிகுந்த மனிதாபிமானத்தோடு பழகுகிற தன்மை மிக மிக இன்றியமையாததாகும். அந்தத் தன்மைக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக விளங்கியவர் மறைந்த திரு எத்திராஜுலு அவர்கள் ஆவார்கள்.

அவர் திடீரென்று இயற்கை எய்தினார்கள். முதல் நாள் வரையில் பொதுப்பணிகளில் அவர் ஈடுபட்டிருந்தார்கள். இங்கே கோட்டைக்கு வந்து அமைச்சர்களுடைய அறைகளுக்கு எல்லாம் சென்று மறுநாள் காலையில் 11 மணிக்கு மீண்டும் தான் கொண்டு வந்த அலுவல்களை நிறைவேற்றித் துணைபுரியவேண்டும் என்று அலுவலர்களுக்குச் சொல்லிவிட்டுச் சென்றார். 11 மணிக்கு மறுநாள் வருவதாகச் சொல்லிச் சென்றவர் காலை 9 மணிக்கு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு 11 அல்லது 11-30 மணி அளவில் உயிர் துறந்தார் என்ற செய்தி, திடுக்கிடத்தக்கதாயும் அதிர்ச்சியை உருவாக்கிடத் தக்கதாயும் அமைந்தது. அவர் இந்த மாமன்றத்தில் அமர்ந்திருந்த இடத்தை நோக்குகிற